2015 செப்டம்பர் 3]

மேட்டுப்பாளையத்திற்கு அருகில் இருக்கக்கூடிய மாணவ, மாணவிகள் உயர் கல்வி பெற வேண்டும் என்று சொன்னால், கோவை மாநகருக்குச் சென்று படிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையிருக்கிறது என்ற ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலியுறுத்தி வருகிறார். மேட்டுப்பாளையம் பகுதியில் இருக்கக்கூடிய மாணவர்கள் கல்வி பெறுவதற்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 216, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

216—

சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம்

***32873—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, குளச்சலில் சார்பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

குளச்சல் தொகுதி, குளச்சலில் அரசாணை நிலை எண் 42, வணிக வரி மற்றும் பதிவுத் (பதி2) துறை, நாள் 12-3-2015-ல் குளச்சல் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய அரசுக் கட்டடம் கட்டுவதற்கு நிருவாக அனுமதியும், நிதி ஒதுக்கீடும் வழங்கப்பட்டு கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

[2015 செப்டம்பர் 3

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கனிவான அறிவிப்புக்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பள்ளியாடி பகுதியில் ஒரு பழமைவாய்ந்த சார்பதிவாளர் அலுவலகம் இருக்கிறது. அந்தக் கட்டடம் சரியாக இல்லை. அந்தப் பகுதியிலே ஒரு புதிய சார்பதிவாளர் அலுவலகம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு வாடகைக் கட்டடங்களில் இருக்கின்ற சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும், அதனோடு இணைந்து பழமைவாய்ந்த, மிகப் பழமைவாய்ந்த சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்களுக்கும் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் 126.52 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 160 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும், 50 ஒருங்கிணைந்த சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும், ஆக மொத்தம் 210 அலுவலகங்களுக்குக் கட்டடங்கள் கட்டித் தருவதற்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. படிப்படியாக தற்சமயம் 119 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையோடும், மகிழ்ச்சியோடும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். அதற்கடுத்த கட்டமாக, 91 சார்பதிவாளர் அலுவலகங்களுக்குப் புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்கு கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

குளச்சல் தொகுதியின் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்ட பள்ளியாடி சார்பதிவாளர் அலுவலகத்தின் நிலை கண்டறியப்பட்டு, படிப்படியாக அந்த அலுவலகத்திற்கும் புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு இதய தெய்வம்

2015 செப்டம்பர் 3]

டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று நிறைவேற்றித் தர ஆய்வு செய்து, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய இரண்டு மாவட்டங்கள் ஒன்றாக இருந்த காலகட்டத்தில், பாலக்கோட்டில் சார்பதிவாளர் அலுவலகம் அமைக்கப்பட்டிருந்தது. 2004 ஆம் ஆண்டுக்குப் பிறகு, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய இரண்டு மாவட்டங்களும் தனியாகப் பிரிக்கப்பட்டன. இன்றைக்கும் தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த வன்னிகுளம், இருமத்தூர், கெலவள்ளி, கொங்கரப்பட்டி, வருரப்பம்பட்டி, கே.ஈச்சம்பாடி மற்றும் கம்பைநல்லூர் உட்பட பத்துக்கும் மேற்பட்ட பஞ்சாயத்துகளில் உள்ள கிராம மக்கள் கிருஷ்ணகிரி மாவட்டம், பாரூரில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்குத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, தருமபுரி மாவட்ட மக்கள் அங்கு செல்வதைத் தவிர்த்து, கம்பைநல்லூரில் ஒரு புதிய சார்பதிவாளர் அலுவலகம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்து ஊராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளில் புதிய சார்பதிவாளர் அலுவலகம் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இங்கே கேள்வியை எழுப்பினார்கள். அந்தப் பத்து ஊராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளில் எத்தனை ஆவணங்கள் பதிவு செய்யப்படுகின்றன என்ற நிலை கண்டறியப்பட்டு, ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அது ஏற்புடைய நிகழ்வாக இருந்தால், அது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, நிறைவேற்றித் தரப்படும்

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 217, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

217—

புதிய ஊராட்சி

***37436 திரு. வீ.பி. நாகைமாலி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்வேளூர் தொகுதியிலுள்ள அகரக்கடம்பனூர் ஊராட்சியை இரண்டாகப் பிரித்து, வடக்குவெளியை புதிய ஊராட்சியாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

கீழ்வேளூர் தொகுதி, அகரக்கடம்பனூர் ஊராட்சியை இரண்டாகப் பிரித்து, வடக்குவெளி ஊராட்சி என்று புதிய ஊராட்சியை உருவாக்க கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கியுள்ள அகரக்கடம்பனூர் ஊராட்சி*